தினமணி

## கலப்பின பசுக்களில் பால் சுரக்கும் அளவு குறையும்

First Published : 30 May 2012 08:59:37 AM IST

நாமக்கல், மே 29: வெப்ப அளவுகள் மீண்டும் அதிகரித்துள்ளதால் பிரிசீயன், ஜெர்சி ஆகிய கலப்பின பசுக்களில் பால் சுரக்கும் அளவு குறைய வாய்ப்புள்ளது என்று, நாமக்கல் வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள செய்தி:

நாமக்கல் மாவட்ட வானிலையில் வரும் 3 நாள்களுக்கு (மே 30 முதல் ஜூன் 1 வரை) லேசான மேகமூட்டத்துடன் சில இடங்களில் அதிகபட்சம் 5 மி.மீ. வரை மழை பெய்யக் கூடும். காற்றின் திசை வேகம் மணிக்கு 7 கி.மீ. முதல் 8 கி.மீ. வரை மேற்கிலிருந்து வீசக் கூடும். வெப்ப நிலை குறைந்தபட்சம் 26 டிகிரி செல்சியஸ் முதல் அதிகபட்சம் 39 டிகிரி செல்சியஸ் வரை காணப்படும். காற்றில் ஈரப்பதம் குறைந்தபட்சம் 44 சதம் முதல் அதிகபட்சம் 73 சதவீதம் வரை காணப்படும்.

கோழிப் பண்ணையாளர்களுக்கு...

வங்காளவிரிகுடாவில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையால் வெப்ப அளவுகள் உயர்ந்து காணப்படும். எனவே, கோழிகளுக்கு தொடர்ந்து குளிர்விப்பு முறைகளை கையாண்டும், தீவனத்தில் வைட்டமின் சி சேர்த்தும் வெப்பத்தை எதிர்கொள்ள வேண்டும்.

வேளாண் விவசாயிகளுக்கு...

வெப்ப அளவுகள் மீண்டும் உயர்ந்துள்ளதால் பிரிசீயன், ஜெர்சி இன கறவை மாடுகளில் பாலின் அளவு குறைய வாய்ப்புள்ளது. பால் குறையாமல் இருக்க அந்த வகையான கலப்பின பசுக்களை காலை, மாலை இரு வேளைகளும் தண்ணீரால் குளிப்பாட்டவும், பசுப்புல் தீவனத்தை அளித்தும், வெப்பம் குறைந்த நிழல் பகுதியில் பராமரித்து வர வேண்டும்.

## அக்ரி இன்டெக்ஸ் 2012 இன்று துவக்கம்

First Published : 30 May 2012 08:29:33 AM IST

கோவை, மே 29: தென்னிந்தியாவின் மிகப் பெரிய சர்வதேச விவசாயக் கண்காட்சியான "அக்ரி இன்டெக்ஸ் 2012' கண்காட்சி கோவை, கொடிசியா வளாகத்தில் புதன்கிழமை துவங்குகிறது.

புதன்கிழமை (மே 30) முதல் வரும் ஜூன் 3-ம் தேதி வரை நடக்க கண்காட்சி நடக்க உள்ளது. கண்காட்சியைப் பார்வையிட தென்னிந்தியா முழுவதும் இருந்து சுமார் ஒரு லட்சம் பேர் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விவசாயத்தில் இயந்திர மயமாக்கல், அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பம், விவசாயத்தில் அறிவியல்பூர்வ முறைகள், மதிப்புக் கூட்டிய பொருள்கள் தயாரித்தல், உணவு பதப்படுத்துதல் உள்ளிட்டவற்றை முன்னிறுத்தி கண்காட்சியில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

225 நிறுவனங்களைச் சேர்ந்த அரங்குகள் அமைக்கப்பட உள்ளன. சுமார் 10 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் பயன் பெறும் வகையில் 29 தலைப்புகளில் கருத்தரங்குகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## மும்பை மார்க்கெட்டில் தேங்காய் விலை சரிவு

மே 29,2012,13:57



ப.வேலூர்: மும்பை மார்க்கெட்டில், ஆந்திர மாநில தேங்காய் வரத்து அதிகரித்ததால், தமிழக காய்க்கு விலை குறைந்துள்ளது. இதுவரை 2.60 லட்சம் ரூபாய்க்கு விற்பனையான ஒரு லோடு தேங்காய், தற்போது, 1.10 லட்சம் ரூபாயாகக் குறைந்துள்ளது. அதனால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். ப.வேலூர் சுற்று வட்டாரப் பகுதிகளான, பொத்தனூர், பாண்டமங்கலம், பிலிக்கல்பாளையம், கொளக்காட்டுப்புதூர், ஜேடர்பாளையம், சோழசிராமணி, நன்செய் இடையாறு, குப்புச்சிபாளையம் உள்ளிட்ட பகுதிகளில், 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு அறுவடை செய்யப்படும் தேங்காய்கள், அப்பகுதியில் உள்ள, மண்டிகளுக்கு கொண்டு வரப்பட்டு தரம் பிரித்து, மட்டை உரித்து, லாரிகள் மூலம் மும்பைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அதன்படி தினமும், 100 லாரிகளில் தேங்காய் அனுப்பப்படுகிறது. ஒரு லோடுக்கு, 43 ஆயிரம் தேங்காய்கள் ஏற்றி அனுப்புகின்றனர். ஒரு லோடு தேங்காய், கடந்த மூன்று மாதங்களுக்கு முன், 2.60 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. இந்நிலையில், மும்பை

மார்க்கெட்டுக்கு, ஆந்திர மாநில தேங்காய் வரத்து அதிகரித்துள்ளது. அதனால், தமிழக தேங்காய்களின் விலையில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. ஒரு லோடு தேங்காய், தற்போது, 1.10 லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்த விலை சரிவால், விவசாயிகள், வியாபாரிகள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இது குறித்து விவசாயிகள் கூறியதாவது: மும்பை மார்க்கெட்டில், தமிழக தேங்காய்க்கு நல்ல விலை கிடைத்து வந்தது. அதனால், பெரும்பாலான விவசாயிகள், தென்னை சாகுபடிக்கு மாறினர். ஒரு ஏக்கரில், 80 முதல், 100 தென்னைகள் வரை நடவு செய்து பராமரிக்கின்றனர். தென்னைக்கு பராமரிப்பு செலவு குறைவு என்பதால், அதிக அளவில், விவசாயிகள் தென்னை சாகுபடி செய்துள்ளனர். தற்போது, தமிழக தேங்காய் விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது. அதனால், விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் பெருத்த நஷ்டம் அடைந்துள்ளனர். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

### எகிறியது கருவாடு விலை

மே 29,2012,11:24



கீழக்கரை : ராமநாதபுரம், கீழக்கரையில், சீலா கருவாடு கிலோ, 1,200 முதல் 1,500 ரூபாய் வரை விற்கப்படுகிறது. மீன்களின் இனப் பெருக்கத்திற்காக, தமிழகம் முழுவதும் விசைப் படகுகள், இம்மாதம் இறுதி வரை, மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. மீன் வரத்து குறைந்துள்ளதால், கீழக்கரை, ஏர்வாடி பகுதியில், கடந்தாண்டு கிலோ, 700 ரூபாய்க்கு விற்கப்பட்ட சீலா கருவாடு, தற்போது, 1,200 முதல் 1,500 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

விலையேற்றம் எதிரொலியாக, சீலா கருவாடு, ஏழைகளுக்கு எட்டாக்கனியாக உள்ளது

## பூச்சி விரட்டியாக வேம்பு பொருள்

பதிவு செய்த நாள் : மே 30,2012,00:00 IST



**வேப்ப விதைக்கரைசல்**: ஒரு ஏக்கருக்கு 3-5 கிலோ ஓடு நீக்கப்பட்ட வேப்பம்பருப்பு தேவை. (புது விதை என்றால் 3 கிலோவும், பழைய விதை என்றால் 5 கிலோவும் தேவை) வேப்பம்பருப்பை பொடி செய்ய வேண்டும். இந்தப் பொடியை ஒரு காடாத்துணியில் மூடையாக கட்டி சுமார் 10லிட்டர் தண்ணீர் உள்ள பானையில் ஒரு இரவு முழுவதும் ஊறவைக்க வேண்டும். அதன்பின் இந்தக் கரைசலை வடிகட்டினால் 6-7 லிட்டர் கரைசல் கிடைக்கும். பயிருக்குத் தெளிக்க வேண்டும்பொழுது ஒரு டேங்கிற்கு (10 லிட்டர்) 500-100 மி.லி. வரை பயன்படுத்தலாம். அதாவது 500-1000 மி.லி, கரைசலை 9 லிட்டர் தண்ணீருடன் கலந்து 100 மி.லி. காதி சோப்புக்கரைசல் சேர்த்து தெளிக்க வேண்டும். (1 லிட்டர்-10 மி.லி. என்ற அளவு) காதி சோப்புக்கரைசல் தாவரக் கரைசலின் ஒட்டும் தன்மையை அதிகரிக்கிறது. ஒரு ஏக்கர் பயிருக்கு 6 டேங்க் வரை தெளிக்க வேண்டும். கைத்தெளிப்பானை பயன்படுத்தினால் 11 டேங்க் பயன்படுத்த வேண்டும். கரைசலின் அடர்த்தியை பூச்சித் தாக்குதலின் தன்மைக்கு ஏற்ப மாற்றிக்கொள்ளலாம்.

**வேப்ப இலைக்கரைசல்**: ஒரு ஏக்கர் பயிருக்குத் தெளிக்க 10-12 கிலோ இலை தேவைப்படும். இந்த இலையை ஒன்றுமிரண்டுமாக இடித்து ஒரு காடாத்துணியில் மூடையாக கட்ட வேண்டும். இதை 20-24 லிட்டர் தண்ணீர் உள்ள பானையில் ஒரு இரவு முழுவதும் ஊறவைக்க வேண்டும். அதற்குப்பிறகு இந்தக்கரைசலை வடிகட்ட வேண்டும். அப்படி வடிகட்டும்பொழுது 15-17 லிட்டர் கரைசல் கிடைக்கும். ஒரு டேங்கிற்கு (10 லிட்டர் அளவு) 500-1000 மி.லி. வரை பயன்படுத்தலாம். அதாவது 500-1000 மி.லி, கரைசலை 9 லிட்டர் தண்ணீருடன் கலந்து தெளிக்க வேண்டும். ஒரு டேங்க் கரைசலுடன் 100 மி.லி. காதி சோப்புக்கரைசல் சேர்த்து தெளிக்க வேண்டும். (1 லிட்டருக்கு 10 மி.லி. என்ற அளவு) காதி சோப்புக்கரைசல் தாவரக் கரைசலின் ஒட்டும் தன்மையை அதிகரிக்கிறது. ஒரு ஏக்கர் பயிருக்கு 10 டேங்க் வரை தெளிக்க வேண்டும். இந்தக்

கரைசல் சுமார் ஒரு மாதம் வரை கெடாமல் இருக்கும்.

**வேப்பம் புண்ணாக்கு**: வேப்பம் புண்ணாக்கை கோணிப்பைகளில் போட்டு தண்ணீர் செல்லும் மடைவாயில்களில் வைக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் வயலுக்குள் செல்லும் தண்ணீருடன் வேப்பம் புண்ணாக்கு கரைந்து சீராகச் செல்லும் வாய்ப்பு உள்ளது. இதனால் பயிரின் வேரைத் தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்கள், தூர்ப்பகுதியில் வரும் பூச்சிகள் ஆகியவற்றை வராமல் தடுக்கலாம். பயிரும் பூச்சி மற்றும் நோய் எதிர்ப்பு திறன் பெறும்.

முனைவர் கோ.பி.வனிதா, வேளாண்மைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை-625 104.
முனைவர் ரா.கோபாலகிருஷ்ணன், ரோவர் வேளாண்மைக் கல்லூரி, பெரம்பலூர்.

## சின்னச்சின்ன செய்திகள்

பதிவு செய்த நாள் : மே 30,2012,00:00 IST



**சோளத்தில் மதிப்பூட்டப்பட்ட பொருட்கள்**:சோளமாவு: ரொட்டி தயாரிக்கும் மற்ற தானியங்களின் மாவோடு கலந்து பயன்படுத்தப்படுகிறது. 70 சதவீதம் கோதுமை மாவு, 20 சதவீதம் தோலுரிக்கப்பட்ட சோள மாவு, 10 சத வீதம் சோயா மாவு ஆகியவை கலந்து பிஸ்கட் தயாரிக்கப்படுகிறது. இவ்வாறு தயாரிக்கப்படும் அடுமனை (பேக்கரி) 47 சதவீதம் புரதமும், 8.3 மடங்கு அதிக அளவு நார்ச்சத்தும் 58.98 சதவீதம் தாது உப்புக்களும் நிறைந்து சாதாரண பிஸ்கட்டுகளை காட்டிலும் ஊட்டச்சத்தில் உயர்ந்துள்ளது.

**சோள ரொட்டி:** சோளமாவு 150 கிராம், சர்க்கரை 50கி, ஈஸ்ட் 10கி, மைதா 100கி, நீர், பால் தேவையான அளவு கொழுப்பு 10மி.லி, உப்பு - தேவையான அளவு.

**செய்முறை**: சோளமாவு, மைதாவை சலித்து, ஈஸ்ட், சர்க்கரை, உப்பு, கொழுப்பு சேர்க்கவும். மேலும் நீர், பால் சேர்த்து மிருதுவாக பிசைந்து ஐந்திலிருந்து 6 மணி நேரம் வரை ஊறவிடவும். பின் ரொட்டி மோல்டுகளில் போட்டு 100-110 டிகிரி செ. வெப்பநிலையில் 10 நிமிடம் வைத்து ஆறியவுடன் துண்டுகளாக்கவும்.

**சோளமாவு கேக் செய்ய தேவையான பொருட்கள்:**சோளமாவு 250 கிராம், சர்க்கரை 300கி, வனஸ்பதி 200கி, முட்டை-5, பால்-75 மி.லி., பேக்கிங் பவுடர்-0.5கி, வெனிலா எசன்ஸ் சில துளிகள், உப்பு - 1 டீ ஸ்பூன்.

**செய்முறை:** மாவை பேக்கிங் பொருளுடன் சேர்த்து கலக்கவும். பொடியாக்கிய சர்க்கரை, வனஸ்பதி சேர்த்து நன்கு கலக்கவும். முட்டையை நன்கு நுரைக்க அடிக்கவும். வெனிலா எசன்சை முட்டையில் ஊற்றி கலக்கவும். இதனை சர்க்கரை, வனஸ்பதியுடன் சேர்க்கவும். பின் மாவைச் சேர்த்து நன்கு கலக்கவும். பால் தேவை என்றால் சேர்த்து இட்லிமாவு பதத்திற்கு கொண்டுவரவும். இதனை வனஸ்பதி தடவிய கேக் பாத்திரங்களில் ஊற்றி 210 டிகிரி செ. வெப்பநிலையில் 25-30 நிமிடங்கள் வரை வைக்கவும்.

(**தகவல்**: முனைவர் ப.சீதா, முனைவர் க.சசிதேவி, முனைவர் ஆர்.மாலதி, அறுவடை பின்னர் தொழில்நுட்ப மையம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், த.வே.பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003. போன்: 0422-661 1268)

**வட மிளகாய்**: காய்கள் மேற்புறம் அகன்றும் கீழ்புறம் குறுகியும் தலைகீழாக உள்ள முக்கோணம் மாதிரி தோன்றும். வெளிர்பச்சை நிறமாக இருக்கும். இது பாரம்பரிய ரகம். ஒரிஜினல் மோர்மிளகாய். இதைத் தான் வடமிளகாய் என்று இங்கு அழைக்கிறார்கள். பொதுவாக கன்னியாகுமரி மாவட்டத்தில் அண்ணனை வடமிளகாய் முருகன் என்றுதான் அழைப்பார்கள் என்கிறார் தம்பி முத்துகிருஷ்ணன். விவசாயி. வடமிளகாய் விவசாயத்தில் இவர்கள் பேமஸ். முகவரி: முத்துகிருஷ்ணன், திருவம்புதனபுரம், ராதாபுரம் (வழி) திருநெல்வேலி மாவட்டம்-627 130. 94434 87823. இந்த மிளகாயில் உரைப்பு கம்மி.

பஜ்ஜி மிளகாய் அளவிற்கு உரைப்பு இருக்கும். விலை ரூ.40/-கிலோ (அதிக பட்சம்). ரூ.6/கிலோ (குறைந்தபட்ச விலை). ஒரு வருடத்திற்கு காய் எடுக்கலாம். நாற்று 45 நாள். 15வது நாளில் பூ. 45வது நாளில் காய் பறிக்கலாம். வாரம் ஒரு முறை பறிக்கலாம்.

**ஒரு ஏக்கர் - வரவு/செலவு**:

ரூ.

உழவு- 600

விதை நாற்று - சொந்தம்

நடவு - 600

தொழு உரம் - 3000

ரசாயன உரம் - 15,000

பூச்சி மருந்து - 20,000

களை - 1000

பறிகளை - 4,000

மொத்த செலவு - 44,200

நிகர வருமானம் - 80,000

**மேலும் விபரங்களுக்கு:** முத்துகிருஷ்ணன், விவசாயி, 94434 87823, 86954 53003, சென்னை.

-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

**தமிழக அரசு தோட்டக்கலைத்துறை மூலம் வழங்கும் மானியங்கள்**

பதிவு செய்த நாள் : மே 30,2012,00:00 IST

வ.எண் - திட்டத்தின் பெயர் - வழங்கப்படும் மானியம் (ஒரு எக்டருக்கு) - விவசாயிகளுக்கு வழங்கப்படும் அலகு

1. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம்(HDS) - 50 சத மானியத்தில் காய்கறி விதைகள் பழச்செடிகள், மலர்ச்செடிகள் வழங்கப்படும் - 0.5 எக்டர் 1.0 எக்டர்

2. வானிலை சார்ந்த பயிர்காப்பீடுத் திட்டம் (WBCIS) - தட்பவெப்பநிலையின் மூலம்சேதாரம் ஏற்படுவதின் காரணமாக வெங்காயம், தக்காளி, மிளகாய் மற்றும் மரவள்ளி போன்ற பயிர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும்.

3. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம்(NADP) (அ) துல்லிய பண்ணையம் அமைத்தல் - ரூ.20,000 ஒரு எக்டருக்கு இடுபொருட்கள் - 0.4 முதல் 1 எக்டர் வரை

சிறு / குறு விவசாயி - 100 சத மானியம் சொட்டுநீர் பாசனம் அமைக்க - ரூ.43,816/-

இதர விவசாயி - 75 சத மானியம் சாகுபடி செய்யும் பயிர்களின் இடைவெளிக்கு ஏற்ப நுண்நீர் பாசனத்திட்டத்தில் வழங்கப்படும் மானியம் வேறுபடும் - அதிக பட்சம் 5 எக்டர்

ஆ) உயர் தொழில்நுட்பம் மூலம் உற்பத்தித் திறன் அதிகரிப்புத் திட்டம் (NADP HITECH) - கீழ்க்கண்ட காய்கறிப் பயிர்களுக்கு இடுபொருட்களுடன் மானியம் வழங்கப்படும்.

வெண்டை, கத்தரி, தக்காளி. இதர காய்கள் ரூ.75,000/- -1 எக்டர்

கீரை வகைகள் ரூ.5,000/- - 1 எக்டர்

பந்தல் காய்கறிகள் ரூ.1,55,600/- (பந்தல் அமைப்பு உட்பட) - 1 எக்டர்

4. பசுமைக்குடில் (யூனிட் மானியம்) - ரூ.3,25,000/- (1000 ச.மீ.க்கு)- 4000 ச.மீ.
பசுமைக்குடிலில் உயர் மதிப்பு காய்கறி செடிகள் சாகுபடி செய்தல் - ரூ.105/ச.மீ. - 500 ச.மீ.
பசுமைக்குடிலில் உயர் மதிப்பு மலர்செடி சாகுபடி செய்தல் - ரூ.500/-ச.மீ. - 500 ச.மீ.
நிலப்போர்வை அமைத்தல் - ரூ.10,000/- - 2 எக்டர்
நிழல்வலை கூடாரம் உயர் தொழில்நுட்பம் - ரூ.3,00,000/- - 1000 ச.மீ.
அங்கக பண்ணையம்(HDPE 12'X4X2') - ரூ.5000/- -1 எண்.
**தகவல்**: அந்தந்த மாவட்ட தோட்டக்கலை உதவி இயக்குனர்கள்
-கே.சத்தியபிரபா, உடுமலை.

## 'பட்டுப்புழு வளர்ப்பில் பணம் சம்பாதிக்கலாம்'

பதிவு செய்த நாள் : மே 29,2012,23:55 IST

கருத்தை பதிவு செய்ய
ஊட்டி: "அரசின் மானிய, சலுகைகளை பெற்று பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபடுவதன் மூலம் அதிக வருமானம் ஈட்ட முடியும்,' என வலியுறுத்தப்பட்டது.

ஊட்டி அருகே மாயார் பூதநத்தம் கிராமத்தில் பட்டு வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. இதில், சேலம் பட்டு வளர்ச்சி துறை இயக்குனர் பிரபாகரன் பேசியதாவது: சட்டசபை கூட்ட தொடரில் பட்டு வளர்ச்சி துறையை மேம்படுத்துவது தொடர்பான தீர்மானம் தீவிரமாக அமல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்தாண்டு மல்பெரி நடவு செய்ய ஊக்க தொகையாக ஏக்கருக்கு வழங்கப்பட்ட 4,125 ரூபாய், இந்தாண்டு 6 ஆயிரத்து 750 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 5000 ஏக்கர் மல்பெரி சாகுபடிக்கு ஊக்க தொகையாக 33 ஆயிரத்து 750 லட்சம் ரூபாய் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

பட்டுப்புழு வளர்ப்பு தளவாடங்கள் கொள்முதல் செய்ய 3,750 ரூபாய் வழங்கப்படும்; 3 லட்சம் மல்பெரி கன்றுகளை விரைவில் நட திட்ட மிடப்பட்டுள்ளது. முதற் கட்டமாக அரசு சார்பில் 26.65 லட்சம் ரூபாய், தரமான இலை உற்பத்திக்கு விலையில்லா நுண்ணூட்ட சத்து வழங்க 40 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளன. பட்டு விவசாயிகள், புழு வளர்ப்பு மனை, பயிர் மற்றும் தனி நபர் காப்பீடு தொகையில் மாநில அரசின் பங்கு 25 சதவீத்தில் இருந்து 40 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது; பயனாளிகளின் பங்கு தொகை வெறும் 25 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

சிறு, குறு விவசாயிகள் சொட்டு நீர் பாசன வசதி ஏற்படுத்தி கொள்ள 100 சதவீத மானியம் வழங்கப்படும். அரசின் இந் நலதிட்ட மானிய உதவிகளை பெற்று பட்டு வளர்ப்பு தொழில் செய்யும் விவசாயிகள் ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய் வரை வருவாய் ஈட்டலாம். இவ்வாறு, பிரபாகரன் பேசினார். பின், அங்குள்ள விளை நிலங்களில் மல்பெரி மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டன. ஊராட்சி உறுப்பினர்கள் மொய்தீன், சந்திரன், நசீர், முருகன் பேசினர்.

குன்னூர் பட்டு வளர்ப்பு துறை ஆய்வாளர் சிவண்ணா, வெங்கடேசன், முன்னோடி விவசாயிகள் லிங்கா கவுடா உட்பட பலர் பங்கேற்றனர். மசினகுடி பட்டு பண்ணை ஆய்வாளர் ராஜமாணிக்கம் வரவேற்றார். குன்னூர் பட்டு வளர்ச்சி துறை உதவி ஆய்வாளர் லிங்கராஜ் நன்றி கூறினார்.

---

தினகரன்

## காலிங்கராயன் பாசனத்துக்கு ஜூன் 16ல் தண்ணீர் திறந்து விட வலியுறுத்தல்

பதிவு செய்த நேரம்:2012-05-30 09:56:39

ஈரோடு: கரும்பு மற்றும் வாழையை காப்பாற்ற வருகின்ற 16ம் தேதி காலிங்கராயனில் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளனர்.

காலிங்கராயன் பாசன விவசாயிகள் சபை கூட்டம் ஈரோடு அடுத்துள்ள கெம்பனைபுதூரில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சபையின் தலைவர் வேலாயுதம் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் கரும்பு, வாழை ஆகியவற்றை காப்பாற்றவும் மஞ்சள் பயிரிடவும் வசதியாக வருகின்ற 16ம் தேதி காளிங்கராயனில் தண்ணீர் திறந்துவிட வேண்டும்.

வாய்க்காலில் தற்போது நடைபெற்று வரும் பராமரிப்பு பணிகளை விரைந்து முடிக்க வேண்டும், கரும்புக்கு லாரி வாடகை, வெட்டுகூலி நீங்கலாக வயல்வெளி விலையாக டன் ஒன்றுக்கு ரூ.2 ஆயிரம் வழங்க வேண்டும், காலிங்கராயன் வாய்க்காலில் கலந்து வரும் சாய, தோல் தொழிற்சாலைகளை மீது மாசுகட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் கடும் நடவடிக்கை எடுக்க

வேண்டும், மஞ்சளுக்கு விலை நிர்ணயம் செய்ய கோரி கொடுமுடி முதல் ஈரோடு வரையிலான பேரணியில் சங்கத்தின் சார்பில் திரளாக கலந்து கொள்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.